

யோகி,
சுத்தானந்த பாரத
பண்டிதர்,
சி. கணபதிப்பிள்ளை
வரதர்
முதலியார்,
குல. சபாநாதன்
பண்டிதர்,
கா. போ. இரத்தினம்
சோ. நடராஜன்
"இறைமணி"
"தில்லைச்சிவன்"
சு. வே.
வே. சுப்பிரமணியம்
"சாரதா"

---

30 சதம்

விய - மார்கழி

# மறுமலர்ச்சி

ஸ்தாபிதம் : 1927.

# றாஜியார்

வட இலங்கையில் நேர்த்தியான ஆபரண வகைகளுக்கும், விலையுயர்ந்த இரத்தின வகைகளுக்கும் நம்பிக்கையான இடம் இது ஒன்றே. எப்பொழுதும் ஆபரணங்கள் இருப்பில் உண்டு. ஓடருக்கும் நகைகள் செய்து கொடுக்கப்படும்.



**தயவு செய்து எங்களது ஆபரண மாளிகைக்கு விஜயம் செய்யுங்கள்!**

ஹாஜி. வி. எம். எம். எஸ். அப்துல் காதிர்

— பூரண நகை வியாபாரி —

131, கன்னாதிட்டி, : : யாழ்ப்பாணம்.

---

# 'கலண்டர்' உலகில் —— ● ஒரு பெரிய புரட்சி!

வென்றுவிட்டான்,

# ★ விவேகானந்தா! ★

## ~~~~ 1947 ~~~~

ஈடும் இணையும் இல்லை யெனும்படி 'விவேகானந்தா' திருக்குறட் கலண்டர்கள் வெளியாகிவிட்டன! எந்தக் கலண்டரிலும் இல்லாத புதிய அம்சங்களும், கண்கவர் அழகிய அமைப்பு முறையும் உங்களுக்குத் திருப்தி அளிப்பன.

1-ம் நம். கலண்டர் ரூபா **2/50**
2-ம் நம். கலண்டர் ரூபா **2/-** } எங்கும் கிடைக்கும்.

**விவேகானந்தா பிறெஸ்,**

"போன்: 117" பெரியகடை, யாழ்ப்பாணம்.

**VIVEKANANDA PRESS.** "Phone 117"

Grand Bazaar, ... JAFFNA.



# முகத்துவாரம்

கவிதை மறுமலர்ச்சிக்கு விதையிட்ட மகாகவி பாரதியின் நினைவாக சென்ற இதழ் வெளியாயிற்று.

இந்த இதழ் வசனத் தமிழின் புது மலர்ச்சிக்கு வழிகாட்டிய நாவலரை நினைவூட்டிக்கொண்டு வெளிவருகிறது.

தமிழின் மகோன்னத வளர்ச்சிக்கு நமது தமிழ்ப் பெரியார்களின் இம்மாதிரி ஞாபகார்த்தங்களும் அவசியமேயல்லவா?

சரி, அடுத்த இதழ் யாருடைய ஞாபகார்த்தம் — என்று கேட்டுவிடாதீர்கள்! எதற்கும் பொறுங்கள்; பொறுத்திருந்து பாருங்கள்!

உங்களது அன்பான ஆதரவை மட்டும் எமக்களித்து விடுங்கள். வாசக நேயர்களைத் திருப்திப் படுத்துவதைத் தவிர, வேறு ஆசை கிடையாதே, நமக்கு!



ஜவாஹர்! பாரத அன்னையின் வீரப் புதல்வன்! இந்திய மக்களின் இணையற்ற தலைவன்! ஏழைகளின் தோழன்! ஒப்பற்ற தியாகி.

தாயொடு தந்தையும், தானும், மனைவியும், சகோதரரும், தான் பெற்ற பிள்ளையும் - யாவரும் சுதந்திரப் படையின் முன்னணியில் நின்று வீரப்போர் புரிந்த காட்சியை உலகம் பார்த்துக் கொண்டுதானிருந்தது! அதன் பலன்.........

இந்தியாவின், ஒப்பற்ற சிம்மாசனத்திலே ஜவாஹரை ஏற்றி வைத்து விட்டது!

**'பாரத்' ஸ்ருடியோ**

செம்மாதெரு, :: யாழ்ப்பாணம்.

அனுபவமும் திறமையும் மிக்க கலைஞர்கள் வேலைசெய்யும் இடம் இது. ஒரு அழகான சிறந்த 'போட்டோ' பிடிக்க வேண்டுமானால்,

'பாரத்' ஸ்ருடியோவை நீங்கள் நம்பி இருக்கலாம்.

* வேண்டிய மாதிரிகளில் சினிமா ஸ்லைடுகளும் எழுதிக்கொடுக்கப்படும். *

**BHARAT STUDIO**
147, Chemmah St., :: JAFFNA.

யாழ்ப்பாணம் ரயில்வே ஸ்டேசனுக்கு நீங்கள் வரும்போது

"எவறெஸ்ற் ரீ றூம்ஸ்"

ஞாபகமிருக்கட்டும்!

**EVEREST TEA ROOM'S**
Railway Station, JAFFNA.

றப்பர் ஸ்ராம்புகள், 'பிளொக்'குகள், விளம்பரப்பலகை முதலியன செய்யவும் கொண்டாட்டங்களில் சோடனை வேலைகள் செய்யவும் மிகச் சிறந்தவர்:

**S. துரையப்பா,**
லங்கா சித்திரத் தொழிற்சாலை,
ரெம்பிள் றோட் - சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.


உங்களுக்குத் தேவையான சகல விதமான மருந்துச் சரக்குகளையும் வாசனை திரவியங்களையும் எம்மிடம் சகாயமான விலைக்குப் பெறலாம்

**சே. கைலாயபிள்ளை & கா. இரத்தினசபாபதி**
மருந்துச்சரக்கு வியாபாரம், ... பெரியகடை, ... யாழ்ப்பாணம்.

ஏ. ஜே. பீடி ! ஏ. ஜே. பீடி !!

# A. J. BEEDIES.

TRADE




MARK.

கீர்த்தியும் புகழும் வாய்ந்ததும்
மணத்திலும் குணத்திலும் சிறந்ததும்
உங்கள் புகைத்தாகத்தைத் தணிக்கக்கூடியதுமான
ஏ. ஜே. பீடிகளை உபயோகித்து ஆனந்தமுறுங்கள்.
வெளியூர்களுக்கு ஏஜண்டுகள் தேவை!

*Sole Agents:* **N. SIVAGURU,**
137, Wolfendhal St., COLOMBO.

வீட்டுக்குள்ளே

# சுதந்திரக் கொள்ளை!

அ.செ.மு

சுதந்திரக் கொள்ளை அடிப்பதிலே மனிதனுக்குப் பெரிய இன்பம். தனக்குக் கட்டுப்பட்டு தன் கீழே அடிமையாகி விடும் ஓர் உயிரைப் பார்த்து மனித உள்ளம் பரவசப்படுகிறது. கட்டுப்படும் ஜீவனுக்கு அது எவ்வளவு வேதனையைத் தருகிறது என்பதைக் கட்டுப்படுத்துபவன் சிந்திப்பதில்லை. அதிலே தான் அவனுக்குச் சந்தோஷம். சுதந்திரத்தின் பெருமையை உணர்ந்த பூமியில் இன்றைக்கு நடைபெறும் இந்த சுதந்திரக் கொள்ளை ஒன்றே போதுமானது. பலவகைப் போர்வைகளின் மறைவில் இந்தக் கொள்ளை ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொரு குடும்பத்திலும், ஒவ்வொரு தகப்பன் பிள்ளைக்கிடையேயும்கூட நடைபெற்றுக்கொண்டே வருகிறது. கட்டுப்பாடு என்று சொல்லும் போதே அங்கே சுதந்திரக் கொள்ளை நடைபெறுகிறது.

மரியாதை, நன்றியறிதல், உறவுமுறை என்று எத்தனையோ பெயர்கள் அவற்றுக்கு! வழக்கம், மரபு, சம்பிரதாயம், நாகரிகம் என்று அவைகளுக்கு எத்தனையோ மூடிகள்!

ஐயா! உமது பிள்ளை உம்மைக் கண்டதும் ஆசனம் விட்டெழுந்து, சால்வையை எடுத்து இடுப்பில் சுற்றி, கைகட்டி வாய் புதைத்து அடங்கி ஒடுங்கி நிற்பதைப் பார்க்க உமக்கு ஏன் மனங் குளிருகிறது?

அப்படி ஒரு சேஷ்டையுமே செய்யாமல் சாதாரணமாக ஓர் இளம் வாலிபனுக்குரிய கம்பீரத்தோடு இருப்பதைப் பார்த்து உமக்கு எரிச்சல் எரிச்சலாக வருகிறதே - அது ஏன் ஐயா!

ஒருவன் தன் இஷ்டம் போல, தன் மனம் போலத் தனது சொந்த வசதியையும் சௌகரியத்தையும் அநுசரித்து நடப்பதைத் தடைசெய்து அவனைக் கட்டுப்படுத்துவதில் நீர் மரியாதையையும் மதிப்பையுங் கண்டு மகிழுவதாயின், நேற்றைக்கு அரசாங்கம் உம்மைத் தெருவிற் போகக்கூடாது என்று உமக்குத் தடை உத்தரவு போட்ட சமயம் உமக்குப் பெரும் கோபம் உண்டாகி, "சுதந்திரம்! சுதந்திரம்!!" என்று கூச்சல் போட்டீரே, அது ஏன்?

உமது பிள்ளை உமக்குச் செய்யும் அந்த சொல்லப்பட்ட மரியாதைகளை நாளைக்கு யாரோ ஒருவனுக்கு முன்னின்று செய்யும்போது உமது மனம் வெட்கமும் துக்கமும் அடைகிறதே — அதுதான் ஏன்?

இப்போது நீர் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். அதாவது உமது பிள்ளை உமக்கு விதிப்படி செய்யும் மரியாதைகளில், வணக்க ஒடுக்கங்களில் ஏதோ ஒரு குறைவு — என்னவோ ஒரு இழிவு இருக்கிறதாக உமக்குத் தோன்றவில்லையா? அந்தக் குறைவு வேறு ஒன்றுமல்ல, உமது பிள்ளையின் சுதந்திரக் குறைவுதான். உமது பிள்ளைக்கு நீர் கற்றுக்கொடுத்தவைதான் அவனது சுயமதிப்பற்ற, சொந்த நம்பிக்கையில்லாத இழிவு நிலைக்கு விதைகள். நாய் போலவும், அடிமை போலவும் பணிந்து நின்றதைப் பார்த்து, மனம் பூரித்து, அவனை நல்ல பிள்ளை என்று ஆசீர்வதித்துவிட்ட மகா புருஷர் நீரல்லவா?

நாய் நன்றியுள்ள மிருகம் என்று மனித சமூகம் ஏகோபித்துப் பாராட்டுகிறதே - அது ஏன் தெரியுமா? அதனுடைய நாய்க் குணத்தினுல்தான்! எத்தனை செருப்படி கொடுத்தபோதிலும், அதை எப்படி அடித்து உதைத்தபோதிலும் அது செய் நன்றி மறவாமல் காலைச் சுற்றி நின்று வாலை ஆட்டுகிறதல்லவா? அந்த 'நல்ல' குணத்திற்காகத்தான் நாயை மனிதர்கள் விரும்புகிறுர்கள், அதை ஒரு முகமாகப் புகழ்கிறுர்கள். அது சரி. ஆனல் ஒருவனைப் பார்த்து, 'நாயே' என்று பேசிவிட்டாலோ அவனுக்குப் பிரமாத கோபம் வருகிறதே, அது ஏனே?

கிளிப்பிள்ளை வளர்த்துப்பார்த்திருக்கிறீரல்லவா? அதற்கு அழகான கூண்டு செய்து அதற்குத் தினமும் பாலும் பழமுமாக வைத்து ஆசையோடு பராபரித்து வந்தபோதிலும், கூண்டின் கதவு திறந்திருந்த ஒரு சமயம் அது உமக்குக் கணக்குக் கொடுத்து விட்டு போய்விடுகிறது. அதைப் பார்த்து உமது வாய் "நன்றி கெட்ட பிராணி" என்று முணுமுணுப்பது பெரும் பிசகு. ஆகாயத்திலே, பரந்த நீலவானின் கீழே சுயேச்சையாகப் பறந்து திரிவதுதான் அதற்கு ஆனந்தம்.

எந்த ஒரு பிராணிக்குமே அதன் சுதந்தரம்தான் முதல் பெருந்தனம்.

கட்டுப்பாடு என்பது மிகப்பாதகமான ஒரு காரியம். வரம்புள் தேங்கி நிற்கும் தண்ணீர் கூட உலகம் தோன்றியது முதல் கட்டுப்பாட்டை எதிர்த்து அலைமோதிக்கொண்டுதானிருக்கிறது.

"இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டிற்
கெடுக உலகியற்றி யான்"

என்று ஔவை தெய்வத்தைச் சபித்தது வெகு பொருத்தம்.

தேச விடுதலை பற்றிப் பேசுமுன் நமது வீடும், நமது குடும்பமும் தனிப்பட்ட நாம் ஒவ்வொருவருமே போலிக் கட்டுப்பாடுகளிலிருந்து விடுதலை பெற வேண்டும். மனிசனை மனிதன் சுதந்திரக் கொள்ளை அடிப்பது அறவே தொலைய வேண்டும். ✲

# தமிழின் மறுமலர்ச்சி

— யோகி சுத்தானந்த பாரதியார்,

தமிழுலகிற்கு இனிய எளிய உரைநடையைத் தந்தது யாழ்ப்பாணமே. ஸ்ரீ ஆறுமுக நாவலர் நடைதான் நமக்குச் சிறந்த பயனைத் தரும் தமிழ் நடையாகும். அவர் உரிய இடத்தில் வடமொழிகளை வழங்கியிருக்கிறார். பண்டிதர், பாமரர் அனைவரும் நன்றாக விளங்கிக்கொள்ளும்படி அவரே முதன் முதல் உரைநடை எழுதிக் காட்டினார். நாவலர் பிரபந்தத் திரட்டுத்தான் நமது மறுமலர்ச்சிக் காலத்தின் முதற் புத்தகம்.

ஒருகடவை திருச்சியில் நாவலர், மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையுடன் பேசிக்கொண்டிருந்தார். அச்சமயம் புலவர்மணி தியாகராச செட்டியார் தமிழ் வளர்ச்சி பற்றிப் பேச்செடுத்தார். "தியாகராசு, நமது நாவலரைப்போல பேசி எழுதி உரைநடையைக் கையாண்டால், மாணவர் தமிழைக் கரும்பு போலச் சுவைப்பார்கள்" என்றார் மகாவித்துவான்.

நடை என்பது அவரவர் கல்வி, அறிவு, அனுபவம், பழக்க வழக்கங்களை ஒட்டியிருக்கும். இதற்கு ஒரு கட்டுப்பாடில்லை. அரசியல் பத்திரிகையில் தலையங்கம் எழுதி வழக்கமான பேனாவுக்கும் சிறந்த கவிமாலைகள் தொடுக்கும் எழுத்தாணிக்கும் வேறுபாடுண்டு. வேதநாயகம்பிள்ளையின் பழமொழி நடைக்கும், நாவலரின் ஆவேசப் பாய்ச்சலுக்கும், சாமிநாதையரின் எளிய நடைக்கும், இக்காலப் பேச்சு நடைக்கும் வேறுபாடுண்டு. ஒருவர் நடையை அளவாகக் கொண்டு மற்றொருவரை அளப்பது குயிலை அளவாகக்கொண்டு கிளியை மதிப்பிடுவதாகும்.

தமிழ் ஒவ்வொரு நாளும் வளர்ச்சி பெற்று வருகிறது. சங்கத் தமிழைவிட இக்காலத் தமிழில் இனிய எளிய சொல்லோட்டமும் புதுமைக் கருத்துகளும் அதிகம்.

ஆங்கிலம், பிரெஞ்சு, வங்கம், இந்தி முதலிய மொழிகளில் சிறந்த உரைநடை நூல்கள் மல்கிக் கிடக்கின்றன. கவிதைகளுக்கோ கணக்கில்லை. நமது தமிழிலும் அப்படி ஏராளமான நூல்கள் வரவேண்டும். அந் நூல்கள் பொதுஜனங்களுக்குப் பயன்படவேண்டுமானால் சொற்கள் உள்ளத்திலிருந்து இயல்பாகப் பொழிய வேண்டும்; விஷய ஞானம் மலிந்திருக்க வேண்டும்; படிப்பவர் உள்ளத்தைக் கவர்ந்து செல்லும் சலசலப்பும் நளினமும் நடையிலிருக்க வேண்டும்.

அழகான ஒரு பொருளை மனம் விரும்பிக் காண்பதுபோலவே அழகான நடையையும் மனம் ஆவலுடன் பார்த்துப் பருகும். அத்தகைய நடையை மறுமலர்ச்சி இளைஞர் இப்போ

# நாவலரைப்போல நமக்காளில்லை!

பண்டிதர்
சி. கணபதிப்பிள்ளை

நாவலர் 'பச்சைப்படி'யாகச் சொல்லுகிறவர். ஒளித்து மறைத்துச் சொல்லத் தெரியாதவர்; 'குத்த'லாகக் 'கிண்ட'லாகக் 'குறிப்'பாகச் சொல்லத் தெரியாதவர்; 'பூசி' 'மெழுகி'ச் சொல்லத் தெரியாதவர்: இந்தக் காலத்து 'நாகரீக' புருடர்கள்போல.

'பச்சைப்படி'யாகச் சொன்னாலும் சொற்கள் ஊடுருவிப் பாய்வன. குற்றவாளியைக் கொதிக்கச் செய்வன. சத்திர வைத்தியம் செய்து திருத்தம் விளைப்பன. இரக்கத்திலே பிறந்த சொற்கள். நேர்மையிலே விளைந்த சொற்கள். தம்மவர் பிறர் என்று பாரபட்சம் பாராத சொற்கள். அதனால் யாவரையும் கிடுகிடுத்து நடுங்கச் செய்த சொற்கள். யாவருக்கும் திருத்தம் விளைத்த சொற்கள்.

நாவலரைப்போல நமக்காளில்லை. முற்போக்குப் பேச நமக்காட்களுண்டு; சமரசம் பேச நமக்காட்களுண்டு. தேசியக் கிறீஸ்தவர்களுண்டு; பாதிரி செய்த நன்மையை நோக்கி உருகுவோருண்டு. இக்காலப் போலி நடிப்பை எடுத்துக்காட்ட நமக்காளில்லை. நாவலரைப்போல நமக்காளில்லை. ❋

["யாழ்ப்பாணத்துச் சமயநிலை" யின் முகவுரையில்]

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

சிருஷ்டித்து வருகிறார்கள். இப்போது வெளிவரும் எல்லாப் பத்திரிகைகளிலும் மறுமலர்ச்சி வேகம் புதுப்புது அலங்காரங்களுடன் நடம்புரிகிறது.

யாழ்ப்பாணத் தமிழர் 'மறுமலர்ச்சி' முரசுகொட்டித் தமிழ் வளர்த்து வருவதுபற்றி மிக்க மகிழ்ச்சியடைகிறேன். அதற்கேற்ற உரிமையும் பெருமையும் அவர்களுக்குண்டு. நமது நாட்டிற் பிறந்த எந்த மொழியையும் நாம் குறைகூறித் தூற்றாமல் நமக்கு இயல்பாயுள்ள மொழியை மனச்சாட்சிக்குப் பொதுவாய் வளர்த்தால் மறுமலர்ச்சி கனி குலுங்கும்.

தமிழில் கதை, கட்டுரைகள் ஏராளமாயிருக்கின்றன. கவிதையும், நாடகமும், தொடர் கதைகளும், ஸயன்ஸ் நூல்களும், கலை நூல்களும் ஏராளமாக வரவேண்டும்.

புதிய எழுத்தாளர்களை எல்லாம் என்னுள்ளம் அன்புடன் வரவேற்கிறது.

ஒவ்வொரு பேனாவிலும் ஓர் இனிய சுவை பொழிகிறது.

தமிழுக்காக எவர் எப் பணி செய்தாலும் ஆர்வமுடன் ஏற்றுப் போற்றுவோமாக!

யாழ்ப்பாணத் தமிழர்களுக்கெல்லாம் என் அன்பு, அன்பு. ❋

# உணர்ச்சி ஓட்டம்

[முன்பு: வாழ்க்கைப் பாதையில் கால்கடுக்க நடந்துகொண்டிருக்கும் பார்வதிக்கு ஆறுதல் அளிப்பதற்காக, பரிசுத்தமான 'நண்பன்' என்ற முறையில் அவளை அடிக்கடி சந்தித்து வந்தேன். இது என் மனைவிக்குத் தெரியாது. திடீரென அவள் இறந்தாள். இதனால் ஏற்பட்ட வைராக்கியத்தினால், பார்வதியைப் பார்க்கப் போவதில்லையெனத் தீர்மானித்தேன். அவளுடைய உருக்கமான கடிதம் வந்தது. அதையும் அசட்டை செய்தேன். ஒருநாள் ஒரு கனவு; அதில் பார்வதி இறந்துபோய், பிசாசு ரூபமாக வருகிறாள். திடுக்கிட்டு விழித்தேன். பார்வதியின் கடிதத்தை நான் அசட்டை செய்ததால், அவள் தற்கொலை செய்திருப்பாளோ?]

❋

**க**னவு பொய்யாயிற்று. பார்வதி உயிரோடு இருக்கிறாள்! ஆனால்......ஐயோ, என்ன பரிதாபம்! இந்தச் செய்தி எனக்குத் தெரியாமலே இருந்திருக்கக் கூடாதா? யாழ்ப்பாணத்திலிருந்து என் மாமா எழுதியிருந்த கடிதத்தில்தான் பார்வதியின் விஷயம் இருந்தது.

மாமாவின் கடிதம்.

தம்பி,

இங்கு யாவரும் நல்ல சுகம். உன் மனதுக்கும் ஈஸ்வரன் ஆறுதல் அளிக்கட்டும்.

உன்னுடைய நிலைமையைப் பற்றி வீணாகக் கவலைப்பட்டு உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதே. ராணியைப் போன்ற ஒரு பெண், இனி உனக்கு மனைவியாகக் கிடைக்கமாட்டாளென்பது உண்மைதான். என்ன செய்யலாம். விதி அவ்வளவுதான், நாம் என்ன செய்ய முடியும்? இதிலும் பார்க்க மிகவும் கொடூரமான விஷயங்கள் உலகத்தில் நடப்பதை தினம் தினம் பார்த்

வரதர்

துக் கொண்டுதானே இருக்கி ருேம்? வீட்டுக்கு வீடு வாசற் படிதான். ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் பெரிய கஷ்டங்கள் ஏற்படுவது சகஜம்தான். இதற் காக மனதை அலேய விட்டு சோகத்தில் ஆழ்ந்து போவது மதியீனம்.

தம்பி, உனக்கு நான் அதிகம் எழுதவேண்டியதில்லே. நீதானே எவ்வளவோ நல்ல மாதிரியாகக் கதைகளெல்லாம் எழுதுகிருய். உனக்கு உலகப்போக்கு தெரி யாதா?

உன்னிலும் பார்க்கப் பெரிய கவலேயை நமது பக்கத்து வீட் டுக்காரர்கள் அனுபவிக்கிருர்கள். பார்வதி, என்றஅந்தப் பெண்ணே உனக்குத் தெரியுமல்லவா? பாவம், அவளுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது. முந்தநாள்தான் இங்கே கொண்டு வந்தார்கள். அந்தப் பெண்ணுக்கு வாய்த்த புருஷன் மிகவும் பொல்லாத வனும். பெரிய குடிகாரனும். அதோடு யாரோ ஒரு பறங்கிப் பெண்ணேடும் அவன் சிநேகித மாம். அவனுடைய நடத்தையால் தான் இந்தப் பெண்ணுக்கு பயித்தியம் பிடித்து விட்ட தென்று சொல்லுகிருர்கள். பாவம், இந்த வயதில் இந்தப் பெண்ணுக்கு இப்படி நேர்ந்த தைப் பார்க்க உலகத்தின் மீதே வெறுப்பு ஏற்படத்தான் பார்க் கிறது.

நாம் என்ன செய்ய முடியும்? எல்லோருக்கும் ஒவ்வொரு கவலே வருகிறதென்பதற்காக இதை எழுதினேன்.........

—உனது பிரிய மாமா
இராமலிங்கம்

ஓடிக்கொண்டிருந்த மாட்டுக் குச் சவுக்கினல் 'சுளீர் சுளீர்' என்று இரண்டு அடி போட்டது போல், இந்தக் கடிதமும் என் உள்ளத்தை மேலும் மேலும் அலேய வைத்தது.

பார்வதிக்குப் பைத்தியம் பிடி த்ததற்குக் காரணம் அவளுடைய கணவனின் துர்நடத்தைதான? அல்லது அவளது உருக்கமான, நியாயமான வேண்டுகோளே நிரா கரித்ததன்மூலம் அவள் உயிரைக் கருக வைத்து, அவளேப் பைத்தி யமாக்கியது நான் தான?

ஆம், நான்தான்! நான்தான் அக் கொடூரமான காரியத்தைச் செய்துவிட்டேன்!

அவளுடைய கணவனின் நடத் தைதான் அவள் மனதைப் புண் படுத்தியது; ஆனல் அதற்கு மரு ந்து என்னிடம் இருந்ததென்ப தை எப்படி மறுக்கமுடியும்? ஆபத்தான சமயத்தில் நோயா ளிக்கு மருந்து கொடுக்க மறுத்த வைத்தியனேப்போல, நான் நடந்துகொண்டு விட்டேன். மிரு கத்தனத்திலும் தடித்த மிருகத் தனம்!


'ஐயோ, பார்வதி! நான் உன க்கு வேண்டுமென்று இக் கொடு மையைச் செய்தேன? என் உள் ளத்தைப் பிளந்து பார்த்தால் தெரியும். என் வாக்குறுதியைக் காப்பாற்றிவிட வேண்டுமென்ற உணர்ச்சித் துடிப்பின லல்லவா இது நடந்து விட்டது?'

புஷ்பம் போன்ற ஹிருதயம் உடைய பார்வதி உணர்ச்சிப் புய லேத் தாங்கமாட்டாமல் பைத்திய மாகி விட்டாள். ஆனல் நான் ...

...... ஆ, எவ்வளவு மோசமான நிலைமைகளையும் உள்ளத்தில் ஏற்றுக்கொண்டு இருக்கிறேன்! என் ஹிருதயம் என்ன இரும்பா? அல்லது கல்லா?

❋

இரண்டு வாரங்களுக்குப் பிறகு மறுபடியும் மாமாவின் கடிதம் வந்தது.



தம்பீ,

இங்கே பக்கத்து வீட்டுப் பெண்ணுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று முன்பு எழுதியிருந்தேனல்லவா? அந்தப் பெண்ணோடு உனக்குப் பழக்கமுண்டா?

இங்கே பல விஷயங்கள் நடந்து விட்டன. அந்தப் பெண்ணின் கணவன், அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதால் அவளை 'விவாகரத்து'ச் செய்யவேண்டுமென்று கோர்ட்டில் மனுச் செய்தான். இந்த விஷயம் பார்வதிக்குத் தெரிந்தபோது, ஏதோ ஏங்கினவள்போலக் கொஞ்சநேரம் கிடந்தாளாம். அதுமுதல் அவளுடைய பைத்தியக் குணங்கள் மெல்ல மெல்லக் குறைந்து விட்டன. ஆனால், எல்லோருந் தடுத்தும் கேளாமல், அவள் விவாகரத்துக்குச் சம்மதித்து விட்டாள்! அவளுடைய வாழ்வு இப்படித் திடீரென்று முறிந்துபோனதைக் கண்டு அவள் பெற்றோர்கள் ஒரே கவலையில் மூழ்கிவிட்டார்கள். இப்போது என்னவென்றால் அவளுடைய உயிருக்கே மோசம் வந்துவிடுமோ என்று பயப்படவேண்டியிருக்கிறது. கடுமையான வருத்தந்தான். சன்னிக் குணம் என்று சொல்கிறார்கள்.

இதெல்லாம் உனக்கு ஏன் எழுதுகிறேனென்றால், அந்தப் பெண்ணோடு உனக்குப் பழக்கமுண்டா என்பதைப்பற்றி அறிவதற்குத்தான். விபரீதமாக நினைத்துக் கொள்ளாதே. அந்தப் பெண் அறிவுகெட்ட நிலையில் உன்னுடைய பெயரைச் சொல்லிப் புலம்புகிறாள். 'அவர் வரவில்லையா? அவரை வரச் சொல்லுங்கள்' என்றெல்லாம் புலம்புகிறாள்.

பலருடைய மனதிலும் பலவிதமாக அபிப்பிராயம் இருக்கிறது. ஆனால் யாருக்காவது இதை உன்னிடம் சொல்லவோ, உன்னை வரவழைக்கவோ தைரியமில்லை.

ஆனால், எனக்கு இந்தப் பரிதாபத்தைப் பார்க்க முடியவில்லை. உண்மையில் இந்தப் பெண்ணோடு உனக்கு ஏதும் பழக்கமிருந்தால், நீ உடனே வா! உன்னால் அவளுக்கு ஏதாவது ஆறுதல் கூற முடியுமானால் அதைச் சொல்வதற்குத் தாமதியாதே. தாமதம் செய்தால் ஒருவேளை அவளைப் பார்க்கவும் முடியாமற் போய்விடும். நீ வந்து அவளைப் பார்ப்பதனால் ஊரில் பலவிதமான அபிப்பிராயங்கள் தோன்றக்கூடுமென்பது உண்மைதான். ஆனால் அதற்காகப் பயப்படாதே. அத்தகைய கெட்ட பெயரைச் சுமந்தாகிலும், இந்தப் பரிதாபகரமான பெண்ணுக்குச் சிறிதளவு ஆறுதல் அளிப்பது பெரிய தர்மமாகும்.

நீ கட்டாயம் வருவாயென்றே நம்புகிறேன்.

அன்பார்ந்த மாமா
இராமலிங்கம்

இந்தக் கடிதத்தைப் பார்த்த பிறகும் நான் ராணிக்காகச் செய்த தீர்மானத்தைப்பற்றியே நினைத்துக்கொண்டிருந்தால் அதை யாரும் ஏற்றுக்கொள்ள முடியாது! ஒருவேளை பார்வதியின் முடிவே நெருங்கிக் கொண்

டிருந்தால்.........? நான் கட்டாயம் போகவேண்டும்! அவளுடைய 'கடைசி ஆசை' இதுவாகவே இருக்கலாம். உலகமே புரண்டு போகுமென்றாலும் இதை நான் செய்தேயாக வேண்டும்........... ராணி ...... அவள் இதை ஏற்றுக் கொள்வாள்!

மாமாவின் உணர்ச்சி கூடவா, எனக்கில்லாமல் போய்விடும்? 'வரக்கூடிய கெட்ட பெயரைச் சுமந்து கொண்டாகிலும் அவளுக்கு ஆறுதல் அளி!' என்றல்லவா, அவர் எழுதியிருக்கிறார்! ஆம்; வீண் அபவாதங்கள் தோன்றக்கூடுமென்பது உண்மைதான். ஆனால், அவையெல்லாவற்றையும் தாங்கிக்கொண்டு அவளிடம் நான் செல்வேன். அவளுக்கு நான் தவறு செய்திருந்தால் அதற்கு இது பிராயச்சித்தமாகும்.

❋

1946-ம் ஆண்டு ஐப்பசி மாதம் பதினோராந் தேதி நான் கொழும்பிலிருந்து புறப்பட்டேன். வேலை நிறுத்தம் காரணமாக அன்று ரயில் புறப்படுவதற்குத் தாமதமாயிற்று. தாமதமாகும் ஒவ்வொரு நிமிஷமும் முள்மேலிருப்பது போல எனக்குத் தோன்றிற்று. 'பார்வதி பார்வதி' என்று என் உள்ளம் இடைவிடாமல் உச்சரித்துக்கொண்டிருந்தது.

கடைசியில் ஏதோ ஒரு மாதிரி ரயில் புறப்பட்டது. இடையிடையே ஏதோ கலவரங்களும் நடைபெற்றன. அவைகளிலெல்லாம் என் மனம் கவனம் செலுத்தவில்லை. என் கவனமெல்லாம் யாழ்ப்பாணத்திலே படுத்த படுக்கையாய்க் கிடந்துகொண்டு என் பெயரை ஸ்மரிக்கும் ஒரு பரிதாபகரமான பெண்மேலிருந்தது.

ரயில் போய்க்கொண்டேயிருந்தது. அனுராதபுரத்தில் இறங்க வேண்டியவர்கள் சோம்பல் முறித்துக்கொண்டு எழுந்திருந்தார்கள்.

திடீரென்று ............

'கட கட'வென்று ஒரு பெரிய பயங்கரமான சப்தம்!

'பூகம்பம் வந்துவிட்டது' போன்ற ஒரு பதறல்!

மறு நிமிஷம் .........

இன்னதென்று நினைக்க முடியாதபடி நான் இருந்த இடத்தை விட்டு தூக்கி எறியப்பட்டேன். அந்த நிமிஷமே என் உணர்வையும் இழந்தேன். ❋

(அடுத்த இதழில் முடியும்.)

---

யாழ்ப்பாணம் இசையாளர் சங்கத்தின் ஒன்பதாவது ஆண்டு விழா இம் மாதம் 1.ம் தேதி வண்ணை, வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவுக்குத் தலைமை வகித்த வடமாகாண அதிபர், திரு. C. குமாரசாமி அவர்களும், ஐ. ச. உதவிப் பதிவு காரியஸ்தர், திரு. இராசரத்தினம் அவர்களும் இசையாளர் சங்கத்தின் சேவைகளைப் பாராட்டிப் பேசியதோடு, இனிமேல் செய்யவேண்டிய சேவைகளைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள். ❋

சிங்கள நாட்டு நாடோடிக் கதை:

# தகப்பன் தந்தது!

— முதலியார், குல. சபாநாதன்.

மூன்றொரு காலத்தில் ஒரு கிராமத்திலே 'நாட்டாண்மை' யும் அவனுடைய மனைவியும் வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் அநேக வருஷங்களாகச் சந்தோஷமாகவே இருந்தார்கள். எனினும் அவர்களுக்கு ஒரு பெருங்குறை: பிள்ளைகுட்டியில்லை. 'பிள்ளையில்லா வீட்டில் பிச்சையேற்க மாட்டோம்' என்று பிச்சைக்காரர்கூட ஏளனமாகக் கருதி வருவது உலக இயல்பு. 'பிச்சைக்காரரும் மதிக்காத எங்கள் வாழ்வு ஒரு வாழ்வா!' என்று கவலைப்பட்டார்கள். கோயில்களுக்குப் போய் பல நேர்த்திக் கடன்களைச் செய்தார்கள். பல தீர்த்ததல யாத்திரைகளையுஞ் செய்துபார்த்தார்கள். கடைசியாக திருவருளால் நாட்டாண்மை மனைவி ஒரு பெண் குழந்தையை பெற்றெடுத்தாள். அதனைத் தனது ஆருயிர்ச் செல்வமெனத் தாலாட்டிச் சீராட்டி வளர்த்து வந்தாள். அவளுக்கு அல்லும் பகலும் அந்தக் குழந்தையின் சிந்தனையே. எந்நேரமும் அதைப்பற்றியே பேச்சு. பிள்ளையும் குழந்தைப் பருவங் கடந்து பெரியவளானாள். நாட்டாண்மையும் தன் மகளுக்கு வேண்டிய சகல நகைகளையும் அணிந்து பார்த்து மகிழ்ந்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக அவர்களுடைய அருமை மகள் இறந்துவிட்டாள். நாட்டாண்மையும் மனைவியும் கட்டிய மனக்கோட்டை இடிந்துவிட்டது. இவ்வளவு அருமையாக பேணிவளர்த்த குழந்தை இறந்ததும் நாட்டாண்மையும் அவனுடைய மனைவியும் பெரிதும் கவலையுற்றார்கள். இருவருக்கும் வாழ்வு கசப்பாகவேயிருந்தது. நாட்டாண்மை மனைவி எப்பொழுதும் அழுத கண்ணும் சிந்திய மூக்குமாகக் காணப்பட்டாள்.

ஒரு நாள் நாட்டாண்மை ஏதோ அலுவலாக வெளியே போயிருந்தபோது, அவனுடைய வீட்டுக்கு ஒரு பிச்சைக்காரன் வந்தான். அவன் வெறும் எலும்புந் தோலுமாகவே காணப்பட்டான். அவன் அவ்வளவு தூரம் மெலிந்திருப்பதை நாட்டாண்மை மனைவி கண்டு இரக்கப்பட்டாள். "ஏன் இவ்வளவு கேவலமாக மெலிந்திருக்கிறாய்?" என்று கேட்டாள். 'ஐயோ தாயே, நான் பட்டகஷ்டத்தை என்னென்று சொல்லுவேன். நான் 'அந்த' உலகத்துக்குப் போய் மறுபடியும் இந்த உலகத்துக்குத் திரும்பிவந்தேன். நான் உயிரோடு தப்பிப்பிழைத்தது தம்பிரான்செய்தஉதவி' என்றான் பிச்சைக்காரன். தான் கடினமான சுகவீனமாயிருந்து சுகப்பட்டதால் செத்துப்பிழைத்தனென்ற பொருள்படவே அந்தப் பிச்சைக்காரன் சொன்னான். ஆனால் இறந்துபோன தன் மகளைப்

பற்றியே எப்பொழுதும் சிந்தித்துக் கொண்டிருந்த நாட்டாண்மை மனைவி அவன் சொன்னதை அப்படியே உண்மையென நம்பி விட்டாள். "நீ அந்த உலகத்திலிருந்தோ வருகிறாய்? அப்படியானால் என்னுடைய மகளையும் அங்கே கண்டாயோ? என்று அவள் கேட்டாள். "உங்கள் மகளோ! அவளை.........." என்று பிச்சைக்காரன் சொல்வதற்கிடையில், "என்னுடைய அருமை மகள் கறுப்பாச்சியைப் பற்றித்தான் கேட்கிறேன்" என்றாள், கள்ளங்கபடமறியாத நாட்டாண்மை மனைவி.

தனக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறதெனக் கருதினான் பிச்சைக்காரன். இவ்வரிய சந்தர்ப்பத்தை அவன் நழுவவிட விரும்பவில்லை. "ஓகோ, நீங்கள் கறுப்பாச்சியைப் பற்றியோ கேட்கிறீர்கள்? ஐயோ, அவள் என்னிடம் சொன்ன குறிப்பைக் கொண்டு அவளுடைய தாயாரைப் பார்ப்பதற்காக இந்தத் தெரு முழுவதும் அலைந்தேன். அந்த உலகத்தில் கறுப்பாச்சியை நான் தான் கலியாணஞ்செய்திருக்கிறேன்" என்று மனத்தைரியத்தோடு சொன்னான் பிச்சைக்காரன். உடனே நாட்டாண்மை மனைவி மருமகனை வீட்டிற்குள் அழைத்துச் சென்று தகுந்த மரியாதை செய்தாள். மருமகனுக்கு அன்று மத்தியானம் நல்ல விருந்து அளித்தாள். மருமகனைக் கண்டதும் தன் மகளைக் கண்டது போலவேயிருந்தது அவளுக்கு. தன் அருமை மகள் விட்டுச் சென்ற புடவைகளும் நகைகளும் அவளுக்கு ஞாபகத்தில்வந்தன. அவள் மருமகனைப் பார்த்து "என்னுடைய மகள் விட்டுச் சென்ற இந்தப் புடவைகளையும் நகைகளையும் தயவு செய்து அவளிடம் ஒப்படைத்து விடுங்கள்" என்று சொல்லி எல்லாவற்றையும் அவனிடம் ஒப்படைத்தாள். "ஆமாம், மாமி நான் அப்படியே செய்கிறேன். அவளுக்கு இந்தக் காப்புகள் மீது அதிகம் பிரியமுண்டு என்று அடிக்கடி எனக்குச் சொல்லுவாள். உங்களிடம் இவற்றை நான் கேட்பதற்கு முன் நீங்களே தந்து விட்டீர்கள் அவளும் இவற்றை வாங்கி வந்து விடும்படி சொன்னாள்" என்றான் பிச்சைக்காரன். இனிமேல் ஒரு நிமிஷமேனும் அங்கிருப்பது புத்தியல்ல என்று கருதிய பிச்சைக்காரன் நாட்டாண்மை மனைவியிடம் விடை பெற்றுக்கொண்டு மெதுவாகக் கிளம்பி விட்டான்.

பிச்சைக்காரன் போன சிறிது நேரத்துக்குள் நாட்டாண்மை வீட்டுக்குத் திரும்பி வந்தான். அவன் வந்ததும் மனைவி சிரித்த முகத்துடன் அவனைப் பார்த்தாள்.


"என்ன சங்கதி! இன்றைக்கு முகம் ஒரு மாதிரியாக இருக்கிறதே" என்று கேட்டான் நாட்டாண்மை.

"ஒன்றுமில்லே! இன்றைக்கு ஒரு சிறு புதினம்" என்றாள் மனைவி.

"சரி, சரி! புதினத்தைச் சொல்லு" என்றான் நாட்டாண்மை.

"இன்று காலை எங்கள் மருமகனே நேரே வந்திருந்தார். அவரை நான் நன்கு உபசரித்து அனுப்பினேன். எங்கள் மகளுடைய நகைகளையும் சேலைகளையும் அவரிடம் கொடுத்தனுப்பியிருக்கிறேன். அவர் நீங்கள் வருவதற்கு ஒரு அடிக்கு முன்புதான் இங்கிருந்து புறப்பட்டார். அவர் சற்றுத் தாமதித்திருந்தால் நீங்களும் அவரைப் பார்த்திருக்கலாம்" என்று நடந்ததைச் சொன்னாள் மனைவி. நாட்டாண்மைக்குக் காரியம் விளங்கிவிட்டது. இந்த விசரியை யாரோ பிச்சைக்காரன் அணுப்பிவிட்டானே என்று கவலைப்பட்டான். தன் மனைவி செய்த முட்டாள் வேலைக்காக அவளைக் கோபித்து ஏசிவிட்டு அந்தக் கள்வனைப் பிடிக்க யோசனை செய்தான். 'அவன் நடந்துபோவதால் அதிக தூரம் போயிருக்க மாட்டான். நான் குதிரையிற் சென்றால் அவனைப் பிடித்து விடலாம்' என்று சிந்தனை செய்து, அதன்படியே நாட்டாண்மை தனது குதிரையில் ஏறிச் சவாரி செய்தான். கள்வன் சென்ற திசையை நோக்கி விரைவாகச் சென்றான்! தெரு வழியாகச் சென்ற பிச்சைக்காரன் யாரோ குதிரையில் வருவதைக் கண்டான். தன்னைப் பிடிக்கவே வருகிறான் எனக் கருதினான். உடனே அவன் கிட்டடியில் நின்ற ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். கள்வனை இனி எளிதாகப் பிடித்து விடலாம் என எண்ணிய நாட்டாண்மை அம் மரத்தருகில் வந்து இறங்கி, குதிரையை மரத்தடியில் கட்டிவிட்டு, விறுவிறுப்புடன் மரத்தில் ஏறினான். நாட்டாண்மை மரத்தில் ஏறுவதைக் கண்ட பிச்சைக்காரன் விரைவாக வேறொரு கிளையால் கீழே இறங்கி, கட்டி நின்ற குதிரையை அவிழ்த்து அதன்மீது சவாரி செய்து கொண்டு ஓடினான். மரத்தின்மேலிருந்த நாட்டாண்மை இன்ன செய்வதெனத் தெரியாமல் திகைத்து, ஒருவாறுதெளிந்து, தான் தோல்வியடையக் கூடாதென நினைத்து, "மருமகனே! மருமகனே!! நகைகளும் சேலைகளும் தாய் தந்தவையென்றும், இந்தக் குதிரை தகப்பன் தந்தது என்றும் கறுப்பாச்சியிடம் தயவு செய்து சொல்லிவிடு" என்று உரத்த சத்தத்தில் கூறினான்! ❋





# நாவலரின் பேராசை!

பண்டிதர், கா. பொ. இரத்தினம் B. A., B. O. L.

['மறுமலர்ச்சி' ஆசிரியர்கள் இந்த இதழை 'நாவலர் மணம் வீசி' வெளிவரச் செய்ய ஆசைப் பட்டார்கள். எனது கட்டுரை ஒன்று இதிலிருக்க வேண்டும் என்றும் விரும்பினார்கள். அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றுவதற்குக் காகிதத்தை எடுத்து வைத்துக்கொண்டு எதைப்பற்றி எழுதலாம் என யோசித்தேன். 'நாவலரின் பேராசை' என்பது மனத்திலே தோன்றிற்று; அதனையே தலையங்கமாக்கினேன். இந்த விஷயம் என் மனத்திலே தோன்றியதற்குக் காரணம் இல்லாமலில்லை. அதனை ஈற்றிலே கூறுகின்றேன்.]

இந்தத் தலையங்கத்தைக் கண்டவுடன் அன்பர்கள் பலர் ஆத்திரப்படலாம். 'நாவலர் ஒரு துறவியன்றோ! அவருக்கும் ஆசையுண்டா? அதுவும் பேராசையா? அடடா துரோகம்! துரோகம்!!" எனவும் எண்ணலாம். நாவலர் மாத்திரமன்று, நாயன்மார்களும் ஆசைப்பட்டார்கள். "ஆசைப்பட்டேன் காண் அம்மானே" என மாணிக்கவாசக சுவாமிகளே பாடுகிறார்.

ஆசைப்படுவதிலே இருவகை உண்டு; ஒன்று தனக்காக ஆசைப்படுவது; மற்றது பிறருக்காக ஆசைப்படுவது. தனக்காக ஆசைப்படுபவன் தன்னலம் விரும்பி வாழும் சுயநலப் புலி; பிறருக்காக ஆசைப்படுபவன்தான் பரோபகாரி; அவனையே 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன்' எனப் போற்றுவர். தமக்கென ஆசைப்படுபவர்கள்தான் இக்காலத்தில் எங்கும் நிறைந்து விளங்குகிறார்கள். பிறருடைய

'நாவலர் நினைவு மலர்' என்ற பொன்மலரை மலர்வித்து, அதன் மூலம் தமிழ் மக்களிடையே அழியாப் புகழ்தேடிக்கொண்ட 'வித்துவான்'தான் இந்தப் பண்டிதர்! 'மறுமலர்ச்சி'யின் இந்த நாவலர் நினைவு இதழிலே இவர் கட்டுரை எழுதுவது வெகு பொருத்தம்! பொருத்தம்!! — ஆசிரியர்கள்.

நன்மை கருதித் தொண்டாற்று கிறவர்கள் எந்த நாட்டிலும் மிகக் குறைவாகவே காணப்படுவர். இத்தகைய தொண்டர்தான் நாவலர். யாழ்ப்பாணத்தில் இவருக்குப் பின்பும் முன்பும் இவரைப் போலப் பிறருக்காக ஆசைப்பட்டவர் -- தமக்காகச் சிறிதும் ஆசைப்படாதவர் — ஒருவரும் இல்லை. நிற்க,

"ஆசைக்கு ஓர் அளவில்லை" என்று தாயுமானவர் கூறுகிறார். எங்களைப் பொறுத்த அளவில் "இஃது உண்மை, உண்மை" எனக் கூறுவோம். ஆனால், நாவலருக்கு இருந்த பேராசை ஒன்றே ஒன்றுதான். அஃது என்ன என்பதை அவருடைய கூற்றினாலேயே அறிந்து கொள்ளுங்கள்.

"கன்னியை, நாயகனிடத்து ஒரு திட்டாயினும் வாங்காது வீடு, விளைநிலம், தோட்டம், ஆபரணம் முதலியவற்றோடு விவாகஞ் செய்து கொடுக்கும் வழக்கமே உடையது என் சென்மதேசமாகவும், நான் இல்வாழ்க்கையிலே புகவில்லை. இவைகள் எல்லாவற்றிற்குங் காரணம் சைவ சமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்னும் பேராசையேயாம்."

இந்தப் பேராசையினாலே தூண்டப்பட்டு தமிழ்க் கல்வியையும் சைவ சமயத்தையும் வளர்த்தற்கு அவர் செய்த பணிகள் பல. நாவலர் பிரபந்தத் திரட்டு, நாவலர் புராணம், நாவலர் நினைவு மலர், நாவலர் கோன் முதலிய நூல்களிலே நாவலர் செய்த பல தொண்டுகளையும் பரக்கக் காணலாம். 'நாவலர் பதிப்பு', 'நாவலர் வாசிகசாலை' 'நாவலர் அச்சுக் கூடம்', 'நாவலர் வித்தியாசாலை', 'நாவலர் வசன நடை', 'நாவலர் பாலபாடம்', 'நாவலர் காண்டிகையுரை' முதலிய பல சொல்லாட்சிகளும் சிலவற்றைக் காட்டும். சமயக் கல்விக்காக அவர்கள் செய்த முயற்சியின் விளைவை சைவ வித்தியா விருத்திச் சங்கம், சைவ பரிபாலன சபை முதலியன கூறும். நிற்க,

இனி, நாவலரது உள்ளத்திலே முளைத்த அவருடைய பேராசை எனும் வித்துப் பெரும் மரமாகித் தண்ணிழலும் இன்சுவைக் கனியும் அளிக்குங் காலம் வந்துவிட்டது. இந்தக் காலத்தில் இவ்வருடம் மிகவும் பிரதானமானது. சைவசமயப பிள்ளைகள் யாவரும் தம் சமயக் கல்வியையே கற்க வேண்டும் எனும் பிரமாணம் அரசினராலே விதிக்கப்பட்டுவிட்டது. 'சைவசமயம்' பரீட்சைகளுக்குரிய பாடங்களுள் ஒன்றாகவும் ஆக்கப்பட்டிருக்கிறது. தமிழ் மாணவர்கள் எல்லாப் பாடங்களையும் தமிழ் மொழியிலேயே கற்பதற்கு வேண்டிய ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. தமிழை அரசாங்க மொழியாக்குவதற்கு வேண்டிய முயற்சிகளும் செய்யப்படுகின்றன. இவற்றையெல்லாம் நேரிற் கண்டும், இவற்றிலே பங்குபற்றியும் வரும் நமக்கு நாவலரின் பேராசை - வாழ்வின் இலக்கு - நன்கு நிறைவேறுகிறது எனும் எண்ணமே உதிக்குமன்றோ? ❋

சோ. நடராஜன்



# கழுதை!

கழுதையென் றேயொரு கருத்தில் செந்துவும்
பொழுதுபோக் காகப் புகுத்தினன் பிரம்மா.
ஆதியி லதனுருக் கட்டெறும் பளவெனும்
சேதியை உலகினர் சிறிதுமே யறியார்.
உருவிற் சிறியதக் கர்த்தப மெனினும்
பெருமை யடிப்பதில் பிறரிலை யுலகில்.
நான்முகன் சந்நிதி நாளும் நெருங்கித்
"தேன்முகம் பிலிற்றுஞ் செம்மலர்ப் பிறந்தோய்!
படத்துயர் முடியா தினிநா னுலகில்
மடப்பிடி சிங்கம் மானே புலியே
உருப்பெரி தடைந்தோ ருன்னருள் மறவேன்
வரப்பிர சாதம் மதியிலிக் கருளு"கென்
றாற்றிய வண்ண மழுதழு தழுதது.
கழுதையின் 'கரைச்சல்' தாங்காக் கடவுள்
"முழுதுமுன் விருப்பம் போலநீ பொலிவாய்"
என்றருள் செய்தனன். ஏறுபோற் கழுதையும்
துன்றிய வுருவும் குரலுமுற் றதுவே.
"என்ன மிருகமஃ தெச்சா தியதோ?
கூரிய பற்கள் போலுமற் றதற்கே
சீரிய கொம்புஞ் சிலவுண் டாலோ"
என்று விலங்கெலாங் கன்றிய பயத்தினால்
குசுகுசு வென்றே கூறித் திரிந்தன.
கானக மெங்குமக் கழுதையின் பேச்சே
வானகம் வரையு மெட்டிய சிலநாள்.
ஆயினோ ராண்டு கழிந்திடு முன்னர்
போயின ததன்பேர் புகழு மெல்லாம்.
'காயம் பெரிததன் செவியும் பெரிதுதான்;
வாயும் பெரிதெனின் வறிததன் விவேகம்.
மடைமை மத்தியின் மந்தமற் றிதற்கெலாம்
உடைமை கழுதை'என் றுதாரணங் காட்டினர்.
நீளமே பருமையே பதவியே நிறையினும்
ஆழமில் லாவிடி னவற்றா லென்னோ?

# வாலகம்வாகு

"இறைமணி"

பழைய காலத்தில் இலங்கையை ஆண்ட சிங்கள அரசர்கள் பயங்கரமான யுத்தக் கப்பல்கள் – வெடிகுண்டுகளேயோ தயாரிப்பதில் அதிக கவனம் செலுத்தவில்லை. ஏனெனில் இவைகள் உலகத்தை அழிக்கக் கூடியனவேயன்றி ஆக்கத்துக்குப் பயன்படாவென அவர்கள் கருதினர். அவர்கள் நாட்டை ஆளுவதற்குதவியான சிறு சேனைகளேயே வைத்திருந்தனர்.

வாலகம்வாகு என்னும் சிங்கள அரசன் இலங்கையில் புத்த மதத்தை ஸ்திரமாக ஸ்தாபித்தவனுவன். பழைய சிங்கள அரசர்களது அடிச்சுவட்டையே இவனும் பின்பற்றினுன். விகாரைகள், பாஞ்சாலைகள், தாகபங்கள் கட்டுதலும் சமய வளர்ச்சிக்குதவுதலுமே பழைய சிங்கள அரசர்களின் முக்கிய வேலை ஆகும். வாலகம்வாகு அரசனது ஆட்சிக் காலத்தில் சோழநாட்டிலிருந்தும் ஏழு சேனைத்தலைவர்கள் இலங்கையின் மீது படையெடுத்தனர். வாலகம்வாகு இவர்களைத் தானெதிர்த்து வெற்றி பெற முடியாதென அறிவானுயினும் தைரியத்துடன் எதிர்த்து நின்ருன். வலிமை மிக்க சோழ வீரர்களை நீண்ட நாட்களுக்கு எதிர்த்து நிற்க அவனுல் முடியவில்லை. அதனுல் ஒரு சூழ்ச்சியினுலே அவர்களை வெல்ல எண்ணிய வாலகம்வாகு சோழர்களுக்குத் தப்பி மாயாரட்டைக்கு ஓடிப்போனுன்.

இதன் பிறகு தம்புள்ளைப்பகுதி (வாலகம்வாகுவின் இராஜதானி) சோழர்கள் கைப்பட்டது. சோழர்களில் ஒருவன் ராஜரட்டையில் (அனுராதபுரப்பகுதி) தாம் எதுவும் செய்ய முடியுமென அறிந்து புத்தருடைய பாத்திரமாகிய "பாத்திர தாது"வை எடுத்துக்கொண்டு சோழநாடு திரும்பினுன். மற்ருெரு சோழன் சிங்கள அரசி "சோமாதேவி"யைச் சிறைப்பிடித்துச் சென்ருன். மற்ற ஐவரும் இந் நாட்டை 14 வருடம் 7 மாதம் ஆண்டனர்.

கடைசியில் வாலசம்வாகு தன் சூழ்ச்சியினுல் இவர்களில் நால்வரைக் கொலைசெய்து "தாட்டியன்" என்னும் சோழ சேனுபதியை எதிர்த்து வென்று அரசனுனுன். இது புத்த வருடம் 455-ல் நடந்தது. இதன்பிறகு இவன் இப்பகுதியை 12 வருடகாலம் ஆட்சி புரிந்தான். இக்காலத்தில் "அரகாத்" என்னும் புத்த சித்தர்கள் மகாவிகாரையிற் கூடி தாம் தமது சமய திட்டங்களை வகுக்க எண்ணினர். இதை அரசனுக்கும் அறிவித்தனர். இது கேட்ட அரசன் பாலைவனத்தின் நடுவே குளிர் தாமரைப் பொய்கை கண்டவன் போன்று மனமகிழ்ந்து அவர்

கள் வேண்டுகோட்படி 'அலுவிகாரை'யும் கட்டிக் கொடுத்து வேண்டிய உதவிகளும் செய்தான். வேண்டிய பீடங்களும் தவிசுகளும் ஓலைப்பிரதிகளும் உதவினான்.

இதன்பின் "அரகாத்" சித்தர்கள் இங்கு கூடி ஒரு வருடகாலமாக முயன்று ஒரு புத்தகம் எழுதினர். இம் மகாநாடு "சங்கா எனவா" எனப்படும். இது உலகத்திலே நடைபெற்ற நான்காவது புத்த மகா நாடாகும். இவர்கள் எழுதிய நூல் "திரிபிட்டகம்" எனப்படும். இது காரணமாகவே இன்று வாலசம் வாகு அரசன் புத்த சமயத்தவர்களால் நினைவுகூரப்படுகிறான்.

[ "தம்புளை சவிஸ்தாரம்" என்னும் கல்வெட்டிற் கண்டபடி ] ***

---


# யாழ்ப்பாணம் ஐக்கிய லாப நிதி

**1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.**

**வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.**

**இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்**

ரூபா 3436700. 100 ரூபா விகிதமான 8000 பங்குகள்.

**பங்குப்பணம் கட்டுமுறை :**

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்.

**தினசரிப் பற்று வரவு :**

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம் ;**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள் :**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.

இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன் :**

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்.

S. கனகசபை
சிறப்பர்

# பழக்கம்

"தில்லைச் சிவன்"

தில்லைச் சிவன்

[ஒரு ஜோடி காட்டுப் புறாக்கள் ஒரு வீட்டின் அருகேயுள்ள மரக்கிளையில் அமர்ந்திருக்கின்றன. அப்போது அந்த வீட்டு வளர்ப்புப் புறா ஒன்று பறந்து வந்து மாடிமீது இருக்கிறது.]

பெண் புறா:- நாதா! அதோ பாருங்கள்! அம் மாடியின்மேல் ஒருவர் இருந்து தயங்குகிறார். பாவம், எதையோ கண்டு பயந்துவிட்டார்போல் தெரிகிறது. அவருடைய உடல் பருத்து இருந்தாலும், இளைப்புடையதாக இருக்கின்றதே?

ஆண் புறா:- பெண்ணே! அவரை யாரோ கூட்டில் அடைத்து வைத்து இருந்திருக்கின்றனர். ஆனால், அவர் ஒருவருக்குந் தெரியாமல் ஒழித்து வந்திருப்பார். தான் இதில் இருப்பதை யாரேனும் கண்டால் தன்னை மறுபடியும் சிறைப்பிடித்து விடுவார்கள் என்ற பயத்தினால் இவ்வாறு பயப்படுகிறார். இது எனது பழைய அனுபவம்.

பெண் புறா:- பழைய அனுபவமா?

ஆண் புறா:- ஆமாம், பெண்ணே! அது உனக்குத் தெரியாது. நான் உன்னைக் கல்யாணம் செய்ய முன்னர் அது நடந்தது. ஒருநாள் ஒரு மரத்தின் கீழே தானியங்களைக் கண்டு, நான் போய் இறங்க .........

பெண் புறா:- வலையில் அகப்பட்டுக் கொண்டீர்களோ?

ஆண் புறா:- ஆமாம், பிறகு...

பெண் புறா:- கூட்டில் அடைபட்டீர்கள்!

ஆண் புறா:- ஆ! அந்தக் கொடிய சிறையில் எவ்வளவு கஷ்டப்பட்டேன்! நல்லவேளை! ஒருநாள் அந்த மனிதப் பேய்கள் அசட்டையாய் கூட்டைத் திறந்திருந்தபோது ...........

பெண் புறா:- 'டக்'கென்று பறந்து வந்துவிட்டீர்களாக்கும்?

ஆண் புறா:- ஆமாம். அந்தச் சிறையை இப்போது நினைத்தாலும் மனம் பதறுகிறது!

பெண் புறா:- ஐயோ, பாவம்! அதோ, அவரும் இவ்வளவு நாளாய்க் கஷ்டப்பட்டார் போலும்! ஆனால் ஏன் ஓடிப் போகாமல் அங்கேயே இருக்கிறார்?

ஆண் புறா:- இவ்வளவு நாள் சிறையில் அடைபட்டுக் கிடந்ததால், உணர்ச்சி ஒடுங்கி என்ன செய்வதென்று தெரியாமல் திகைக்கிறார்!

பெண் புறா:- அப்படியானால நாம் அவரையும் கூட்டிக் கொண்டு காட்டுக்குப் போவோம்; வாருங்கள்!

[மறுகணம் இரண்டுமாகப் பறந்து மாடியில் இருந்த புறா வண்டை சென்றன. வீட்டுப்புறா அவ்விடத்தைவிட்டுச் செல்லப் பார்த்தது.]

ஆண்புறா:— 'ஓடாதே, நில்!'

வீட்டுப் புறா:- ............

ஆண் புறா:- நண்பனே! ஏன் தனியாக இங்கே திகிலடைந்து போய் இருக்கின்றாய்? உனக்கு நேர்ந்தது என்ன?

வீட்டுப் புறா:- நான் தனியாகத்தான் இருக்கின்றேன். ஆனால் இவ் வீட்டிலிருப்பவர்கள் அனைவரும் எனது எஜமானர்கள். அவர்களின் இன்ப வாழ்க்கை என்னைப் பொறுத்ததே. பெண்களும் ஆண்களுமாக எனக்கு மாறிமாறி முத்தமிடுவார்கள். நல் லுணவு ஊட்டுவார்கள். மங்கையர் என்னை அணைத்து மகிழ்வர்; பஞ்சணை மெத்தையில் வைத்துப் பரவசப்படுவர்!

ஆண் புறா:- இவ்வளவு இன்பங்களுடன் நீ இருந்தாலும் சுதந்திரமற்ற அடிமையாக அல்லவா கூட்டில் அடைக்கப்பட்டு இருக்கிறாய்? உனது உரிமைகளனைத்தையும் இழந்துவிட்டாய்! அன்னியர் உனது இன்பத்தை உறிஞ்சுகின்றனர். இறுதியில் உனது ஊனையும் புசித்து விடுவர் என்பதை நினைக்க எனது இருதயம் துடிக்கின்றது. நண்பனே! நீ எங்களுடன் வந்து சுதந்திரத்தின் இன்பத்தை அனுபவி. இதனிலும் கூடிய இன்பம் பெறுவாய்!

வீட்டுப் புறா:- (கண்களிற் சிவப்பு ஏறக் கோபித்து) நான் இன்பமாக இங்கே இருந்து பால், பழம், விதைகளை உண்பதை விடுத்துக் காட்டிலே சென்று இரை தேடவா? உங்களுக்கு என் வாழ்வைக் கண்டு பொறாமை ஏற்படுகிறதுபோலும்! நான் அங்கு வரமாட்டேன்!

ஆண்புறா:- (சிரித்து) அன்பா! இரைதேடி வானிற் பறந்து செல்லலாம்; விதைகளையும், கனிகளையும் உண்டு களிக்கலாம்; இன்ப துன்பங்களை எல்லாம் குதூகலத்துடன் கூட இருந்து அனுபவிக்கலாம். அது இன்பமான வாழ்க்கை! நீயும் எங்களுடன் வந்து இவைகளை அனுபவிக்க விரும்பவில்லையா?

வீட்டுப்புறா:- (மேலே வானைப் பார்த்து) இந்த வான வெளியினிலே – நடு வெயிலிலே இரை தேடி அலையவும், இரை கிடைக்காமல் தவிக்கவும் என்னால் முடியாது. அன்றியும் வேடர் முதலிய பகைவர்களுக்கு இரையாகி விடவும் கூடும். எனது இன்ப வாழ்க்கைக்கு உறைவிடமான இடம் இதுவே. இதை விட்டு ஒருபோதும் நான் காட்டுக்கு வரமாட்டேன்.

[மாடியின் சாளரத்தின் வழியாக வெளியே தோன்றிய ஒரு பெண் தனது கரங்களை நீட்டிக் கொண்டு 'குகூ, குகூ' என்று கூவுகிறாள்.]

(மறுபக்கம்)

................ ஒரு சிற்றாறு மலையிலிருந்து குதித்துக்கொண்டு சலசலவென ஓடியது. ...........

---

உருவகக் கதை

# மேகத்தின் காதல்

— சு. வே.

கம்பீரமாக நிமிர்ந்து நின்ற ஒரு மலை. அதன் அழகிய சிகரங்கள் வான் முகட்டைத் தழுவ ஆவல் கொண்டன. அவை வானின் திவ்ய சௌந்தர்யத்தைக் காணவேண்டி உயர்ந்து, திண்ணிதாகக் கலங்காமல் நின்றன. அம்மலை தன்னுடைய தூய வெள்ளிய பனிச் சிகரங்களால் வானைத் தழுவி இன்புறவும் எண்ணியது. ஆனால் ......

மேக மங்கை, மலையின் கம்பீரமான பசுமையழகிலே தன் உள்ளத்தைப் பறிகொடுத்தாள். கணத்துக்குக் கணம் அவள் காதல் வளர்ந்துகொண்டே போனது. ஆனால் முகிலணங்கின் காதலை மலையரசனின் கடின இதயத்தால் உணர முடியவில்லை. லட்சியத்தைச் சாதிக்கும் வீர மகனின் நெஞ்சம் போல அது ஏதோ ஒன்றில் லயித்து விட்டது.

ஐயோ, பாவம்! அந்தக் குளிர் தென்றலும் அப்போதுதானா வீச வேண்டும்! குளிர் வாடையின் குதுகுதுப்பிலே மேக மங்கையின் காதல் உச்சநிலை யடைந்து விட்டது. வான அரங்கில் எத்தனையோ பாவங்களும், உருவங்களும் தோன்ற நர்த்தனமிட்டு அசைந்தாடிக்கொண்டு வந்தாள் அவள். அடுத்த கணம் ........

சீச்சீ! என்ன அநாசரீகம்! தன்னை விரும்பாத அந்தக் கல்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுப் புறா:- அதோ! என்னைப் பிரியமாக அழைக்கிறார்கள்! நான் செல்கின்றேன்.

[வீட்டுப்புறா பறந்தோடுகிறது]

ஆண் புறா:- (பெண்புறாவைப் பார்த்து) பெண்ணே! பார்த்தாயா? இவர் நெடுங்காலமாகக் கூட்டில் வைத்து வளர்க்கப் பட்டுவிட்டார். இதனால் சுதந்திரத்தின் அருமையைத் தெரியாது திகைக்கின்றார். இவர் போன்றே பலர் அடிமைகளாகப் பழக்கப்பட்டதால் சுதந்திரத்தின் சுகத்தை இழந்து இருக்கின்றனர். சுதந்திரம் என்ன என்பதே தெரியாது திகைக்கின்றனர். இவர்கள் தங்களை அடக்கி ஆள்பவர்களைத் தெய்வம் என்று நினைத்துப் போற்றுகின்றனர். அவர்கள் தங்கள் இரத்தத்தை உறிஞ்சுவதைத் தெரியாமல் உழலுகின்றனர். பெண்ணே! நாங்கள் இன்னும் சிறிதுநேரம் இதில் தாமதித்தால் அடிமைப் பேய் எங்களையும் பிடித்துவிடும். வா, போகலாம்.

['சிர்' என்று இரண்டு புறாக்களும் ஆகாயத்தில் பறந்து செல்கின்றன.]

நெஞ்சனை அணைந்துவிட்டாளே அவள். ஓ! அவள் மானங் கெட்டவளோ? மாயக்காரியோ! உண்மைக் காதலியோ?

மேகமங்கையின் அழகிலேனும் ஒய்யார நடனத்திலேனும் மலையரசனின் நெஞ்சம் கலங்கவில்லை. ஏன்? அவளது உள்ளம் ஒன்றுபட்ட அணைப்பினாலேனும் அவன் எவ்வித இங்கித உணர்ச்சிகளையும் காட்டவில்லை; கலங்காது நிமிர்ந்து நின்றான். அவளும அன்பின் பெருக்கால் அவன் மேனி முழுவதும் தீண்டினாள்; அவன் சிரத்திலே அன்பு கனியத் தடவினாள்; பாதங்களில் வணங்கினாள். எதற்கும் மலையரசன் எடுபடவில்லை; தளம்பாது நின்றான், அறிவாளிகளின் ஆழ்ந்த கலங்காத அறிவைப் போல. பாவம்! அவளும் ஒரு பெண்தானே?

'ஐயோ! நான் ஒரு பாவியா? அல்லது அதிர்ஷ்டங் கெட்டவளா? இவர்மேல் பிரேமையால் எவ்வளவு தவிப்படைந்தேன்! கடைசியில் என் விதி என்னை ஏய்த்துவிட்டது. இந்த மலையரசனுக்கு இடங்கொடுத்த இந்த மனதிலே, வேறு ஒரு ஆணுக்கு இடங்கொடுக்கவா? அதிலும் நான் அழிந்துபோவதே மேல்...' இவ்வித சிந்தனைகளால் அவள் உடல் விகாரமடைந்தது. மிருதுவான அவள் வெண்மேனி இருளடைந்தது; அவளது பவித்திரமான அழகு மாண்டது. அவள் கண்களிலே அசாதாரணமான புனித ஒளி சுடர் விட்டது; அடுத்த கணம் இங்குமங்குமாகச் சில மின்னல்களோடின. "என் விதி; ஆனால் என் காதல் புனிதமானது; அதுவே பூரண திருப்தி" என்று அவள் வாய் உரக்கச் சொன்னது; அடுத்த கணம் இரண்டொரு இடி காதிற் பட்டது. அவ்வளவுதான், அவள் தாரை தாரையாகக் கண்ணீரைப் பெருக்கிக்கொண்டு உயிர் துறந்தாள். அவள் அன்புக் கண்ணீர் மலையரசனின் மேனி முழுவதையும் நனைத்தது; உணர்வு வந்தது அவனுக்கு.

"நான் ஒரு துரோகி. நான் என் திண்மையினாலும், கலங்கா நிலையினாலும் அவள் காதலைப் புறக்கணித்தேன். அவளது பரிசுத்த - காதலன்பு நிறைந்த இதயமலரை மோந்து பாராது கசக்கி எறிந்தேன். எவ்வளவுதான் கல்நெஞ்சனாயிருந்தால் என்ன? அன்பின் இடையறாத் தாக்கத்தினாலே, கல்நெஞ்சிற் கூடக் கருணையூற்றுச் சுரந்து பாயலாந்தானே" என்று மலையரசன் முணுமுணுத்துக் கொண்டான்.

ஆம்! மேகமங்கையின் அன்பின் தாக்கத்தால் மலையரசனின் இதயம் இளகி விட்டது; அன்பின் ஊற்றுச் சுரந்து பாயத் தொடங்கியது.

ஒரு சிற்றாறு, மலையிலிருந்து குதித்துக்கொண்டு, சலசலென ஓடியது.

❋ ❋ ❋

வே. சுப்பிரமணியம்.

**நா**கம்மாவீட்டு வேலியோரமாக நின்று உள்ளே எட்டிப் பார்த்தான் குமாரசாமி ......

இனிமேல் தைத்து உடுத்தும் தொழிலை இழந்த வேட்டி; இருபத்திரண்டு வயசாகியும் நாவிதன் கத்தியைக் காணுத முகம்; தன் மூத்த சகோதரி, தமயன், மைத்துனர் — இவர்களால் வஞ்சித்து ஒதுக்கித் தள்ளப்பட்ட அதிர்ச்சியாலேற்பட்ட சஞ்சல தோற்றம்; சிறுவயதில், தானே வாய்க்குள் நுழைத்த மரவள்ளிக் கிழங்கை, நாசம்மா விரல்விட்டுப் பறிக்கும் போது நகங் கீறிக் காயப்பட்ட உதடுகள்; உடம்பெல்லாம் அழுக்கேறியிருப்பினும் இயற்கையாய் அமைந்த வசிகரத் தோற்றம்; — இவன்தான் குமாரசாமி. இவன் பட்டியிலிருந்து பிரித்து வீட்டில் அன்புடன் வளர்த்த ஆட்டுக்குட்டியைத் தேடி வேலியால் உள்ளே எட்டிப் பார்த்தான்.

நாகம்மாவின் தந்தை நாட்டாண்மைக்காரன். அவர் கூப்பன் மாப்பிட்டுத் தின்ஞர். எங்கோ இருட்டுச் சந்தையில் முப்பத்திரண்டு ரூபாவிற்கு ஒரு பறை நெல் வாங்கிப் போட்டிருந்தார். அந்த நெல்லரிசியின் ஒரு சிறு பகுதியை மாவாக்கி, அதை வறுப்பதற்கு உக்கிப்போன வேலியில் ஓலை முறிக்கப்போனுள் நாகம்மா. வேலியோடு வேலியாய்க் குமாரசாமி வேலியிற் சாய்ந்துகொண்டு தலையை உள்ளுக்கு நீட்டியதும், வேலியில் உள்ள கறையான்மண் விழுகிற சத்தம் கேட்டு இரண்டு முழத்துக்கு அப்பால் நின்ற நாகம்மா நிமிர்ந்து பார்ப்பதும் சரியாயிருந்தது. முன்பெல்லாம் குமாரசாமியின் தாயாரிருக்கும் போது ஒருநாளுக்குப் பத்து முறை மாமி என்று கூவிக்கொண்டு ஓடி வருபவள் அல்லவா நாகம்மா? வந்தால் சும்மா இருப்பாளா! குமாரசாமியின் புத்தகங்களை எடுத்து ஒளிப்பாள். அவன் தினம் படுக்கும் சாக்குக் கட்டிலின்மீது மண்ணை அள்ளி மூன்று நாலு குவியலாகக் குவிப்பாள். அவன் கஞ்சி குடிக்கும் சிரட்டையைத் தேடியெடுத்து, மாமி எச்சில் துப்ப அதில் மண்ணை அள்ளிக் கொடுப்பாள். இதையெல்லாம் குமாரசாமி பார்த்துவிட்டானே, தாய்க்கு மறைவில் அவள் வரும்வரை பார்த்திருப்பான்; வந்தவுடன் அவள் கன்னத்தில் இரண்டு கிள்ளுக் கிள்ளி, அவள் கண்ணுல் இரண்டு சொட்டுக் கண்ணீரையாவது கறந்து விட்டுத்தான் ஆறுதலடைவான்!

அவன் என்ன செய்தாலும், நாகம்மா ஒரு நாளைக்கு நாலுதரமாவது மாமியிடம் வராமல் விடவும் மாட்டாள். ஒன்றும் அகப்படாமல் விட்டால் குமாரசாமி சாப்

# நகக் குறி

பிடுகிற தட்டுவத்தையாவது ஒழிக்காமல் போகவும் மாட்டாள்.

காலம் சுழலும் வேகத்தை யார் உணருகிருர்கள்? அன்னமுத்து — குமாரசாமியின் தாய், கள்ளங் கபடமற்றவள். புதன் கிழமை மத்தியானம், பிள்ளைகள் நால்வருக்கும் ஒடியற்கூழ் கொடுத்துவிட்டுத் தகப்பனுக்கும் ஒரு பெரிய சட்டியில் கூழை வார்த்து வைத்து, மீதியாயிருந்ததில் இரண்டு மூன்று பலாவிலை கூழைக் குடித்தாள். பாவம், கூழுக்குப் போட்ட கெழுத்துமீன் முள், தொண்டையில் மாட்டிக் கொண்டது. அன்னமுத்து தன்னுலான மட்டும் பார்த்தாள். கையையுந் தான் உள்ளுக்கு விட்டுப் பார்த்தாள். எடுக்க முடியவில்லை. தேகம் முழுவதும் வியர்வை ஆருகப் பெருகியது. மனுஷிக்கு விஷயம் விளங்கி விட்டது போலும்! குமாரசாமியின் அண்ணன் கந்தவனத்தையும் அக்காள் காமாட்சியையும் அருகிலழைத்தாள்: "நான் செத்துப்போவேன். குமாரசாமியின் குறைப்படிப்பை விடாமற் படிப்பித்துப் போடுங்கோ. குழந்தை சரசு......"

கூக்குரல்!...........

சர்வ அதிகாரமும் காமாட்சி கையில் வந்தது. பெயருக்கேற்ற 'தொழிலாளி' அவள். வசதியாகக் காமரூபனுகிய கைலாசபிள்ளையும் பொறுப்பற்ற நட்பில் புகுந்து விட்டான். கேட்பானேன்? கைலாசபிள்ளை வீட்டிற்கு வர வேண்டியதுதான், குழந்தை சரசு படலைப் பக்கம் விளையாடப் போக வேண்டும்! இச் செய்கை யெல்லாம் புத்தியுள்ள குமாரசாமிக்கு நெஞ்சைப் பிளந்தது. எது சொல்லியும் யார் கேட்கப்போகிருர்கள்? .........

❋

கைலாசபிள்ளை தூரத்தில் வருவதைக் கண்டு கண்ணீர் சொட்டிச் சொட்டிக் குமாரசாமி முற்றத்தில் வெட்டுக் கத்தியைத் தீட்டிக்கொண்டிருந்தான். கைலாசபிள்ளை சமீபித்துவிட்டான். கத்தி உயர்ந்தது! "ஐயோ சண்டாளன் வெட்டுகிருன்!" என்று கத்திவிட்டாள் காமாட்சி! கந்தவனத்தின் கைப்பிடியிற் கிடந்து திமிறினுன் குமாரசாமி .........

தப்பிக்கொண்டு திரும்பியோடிச் சென்ற கைலாசபிள்ளை, இருபது யாருக்கப்பால் நின்று கத்தியைப் பார்த்துக் கொண்டு நின்ருன்.

"பின்னைத்தான் இதென்ன வேசை வீடோ? உவன் வாறதும் போறதும் உலகம் எத்தனை கதைக்குது!" என்று முணுமுணுத்துக்கொண்டு வந்தாள் அடுத்த வீட்டு ஐயாத்தைக் கிழவி. தெருவாலே போன விதானை சண்முகமும் சத்தம் கேட்டு அங்கே வந்தார். "தம்பி, கைலாயபிள்ளை! ஓடாதே, இங்கே வா! நீ என்ன இந்தப் பெட்டையைக் கட்டப் போறியோ, இல்லையோ? உண்மையைச் சொல்லு!" என்று கேட்டார்.

"சரி; நான் கட்டுகிறேன். உவன் இந்த வீட்டில் இருக்கக் கூடாது"

"ஓ! நான் போகிறேன். நீ இருக்கிற முறையாய் இரு" என்று வெளியே போய்விட்டான் குமாரசாமி. பின் கலியா

ணப் பதிவு; கலியாண வீடு; எட்டாம் மாசம் குழந்தை ஒன்று....

பக்கத்திலே பள்ளிக்கூடம் ஒன்று. படுக்க இருக்க அவ இடம் கொடுத்தது குமாரசாமிக்கு. எஞ்சிய நேரமெல்லாம் ஆடுகள் மேயும் மேய்ச்சல் நில நிழல் மரங்களில் புத்தகமும் கையுமாயிருப்பான் இவன். இந்தக் காலத்தில் நாகம்மாவின் தந்தை அவளுக்கு ஒரு "கால்சட்டை மாப்பிள்ளை ஒழுங்குபண்ணி இருக்கிறார்" என்று கூட்டு ஆட்டுக்காரர்கள் சொல்ல நெடுமூச்சுடன் 'அது நல்லதுதானே' என்பான் குமாரசாமி.

❋

வேலியிற் சாய்ந்த குமாரசாமி நோக்கிய இடமொன்று; நாகம்மா நோக்கியவிடம் இன்னொன்று. இங்கே கண் சந்திப்பு ஏற்பட இடமில்லாமற் போய்விட்டது.

'என் நகக்கீறல்பட்ட உதடு; கிழங்கால் நேர்ந்த கீறல், சின்னத்தான் கிள்ளிய கிள்ளுக்கெல்லாம் கொடுத்த நன்கொடை!' முதலில் அவளுக்கு வந்தது அடங்காச் சிரிப்பு. சிரிப்பு மின்னல்போல் மறைந்தது; பிறகு துக்கம். 'இதென்ன தலை! இதென்ன உடை! ஐயோ, இதென்ன கோலம்!' என்ற எண்ணம் உந்த, "சின்னத்தான்! என்ன பேசாமல் நிற்கிறீர்கள்?" என்றாள். குமாரசாமி நிமிர்ந்து பார்த்தான் அவள் முகத்தை. அவன் நெஞ்சு உயர்ந்து தாழ்ந்தது, ஒருமுறை அல்லப் பன்முறை.

'சின்னண்ணு!' என்று கூவிக் கொண்டு கையிலோர் கடிதத்துடன் ஓடிவந்தாள் சரசு. கதாநாயகர் இருவரது கண்களும் ஓய்வு பெற்றன. ஆனல் இருதயம்...!

கடிதம் ஆசிரிய கலாசாலையில் ஆசிரியர் பயிற்சி பெற உரிமை உணர்த்தும் அழைப்புப் பத்திரம்.

காலம் மறுபுறமாகச் சுழலுகிறது; நாகம்மாவின் உண்ணு விரதம் தந்தையின் கடின சித்தத்தை உடைத்து, குமாரசாமிக்கு அடிமையாக்கி அவன் உண்மை மாமனுமாக்கி விட்டது.........

குமாரசாமியின் உதட்டிலிருந்த நகக்குறியைத் தடவிக்கொடுத்து. "உங்களுக்கு இது போதாது சின்னத்தான்!" என்றாள் நாகம்மா.

"தெரியுமா? இனிமேல் உந்த 'சின்னத்தான்' பாஷையை விட்டுவிட வேணும்!"

"பின்னை"

"'இஞ்சாருங்கோ!'— என்று கூப்பிடவேணும்!"

'களுக்'கென்று நாகம்மா சிரித்தாள். குமாரசாமியின் சிரிப்பொலியும் அதோடு கலந்தொலித்தது.

❋ ❋ ❋

---


சங்கீதம் படிக்க. — —

— — விரும்புகிறீர்களா?

**'கீத சிட்சா மஞ்சரி'**

— உதவி செய்யும் —

விலை 30 சதம்.

288, ஆஸ்பத்திரி வீதி, : :

: : யாழ்ப்பாணம்.


---

# எங்கள் நாவலன்!

"நற்றமிழ் முற்றிய
நாட்டினர்" என்றயல்
நாட்டவர் சொற்புகழ்
நாட்டிட, யாழ்நகர்,
முற்பல நற்றவம்
முற்றிய 'மூச்'சினுல்
மோகன ரூபமும்
முத்தமிழ் ஞானமும்
பெற்றெரு "சத்தியப்
பித்த"னென் றேபிறர்
பேசிட வாழ்ந்தநம்
பேரறி வாளனைப்
பற்றுடன் "நாவல"ப்
பட்டமிட் டேதொழப்
பாக்கியம் பெற்றதிப்
பாரத நாடுதான்!

பண்டை இலக்கியப்
பைந்தமிழ்ச் சோலையில்,
பாடிப் பழகிய
பான்மையால், பல்சுவை
மண்டுந் தமிழ்க்கவி
வாய்மை விளக்கியே,
வாத மிடுபவர்
வாயடக் கிச்சிவ
தொண்டு விளைத்தவன்;
தோத்திர மாலைகள்
சொல்லுந் திறத்தினுல்,
தூய நடத்தையால் -
கண்டவர் கேட்டவர்
கைதொழு தேத்திடக்
காந்திபோல் வாழ்ந்தநம்
காளையைப் போற்றுவாம்!

பாஷை நடையிலே
பண்டித வம்புகள்
பல்கிப் பரவிய
பான்மை, தமிழனைத்
தோஷப் படுத்திய
சூழ்ச்சி யுணர்ந்துதன்
சொந்த - இலக்கணச்
சோர்விலாப் - பாதையில்,
லேசு நடைவகுத்(து)
இன்தமிழ் நூல்பல
ஈந்த அருமையை
என்னென் றியம்புவோம்?
தேசம் "வசன நூற்
சித்தன்" இவனெனச்
செப்புஞ் சரித்திரத்
தீர்ப்பை உணர்ந்திரோ?

பாட்டிலும் பேச்சிலும்
பண்கனி யச்சொலும்
'பண்டித மாமணி'
பக்தியாய்ச் சொல்லுவார்
"நாட்டிலே, நந்தமிழ்
நாவலன் போலொரு
நல்லவன் இன்றிலை, -
நம்மவர் பாதிரி
வேட்டையில் வீழ்கிற
வேஷம் விலக்கிட,..."
வேறிலை நாவலன்
மேதை விளக்கிட;
பாட்டிலே சொல்லுவேன்:
பாரத நாட்டிலே
பக்திமான்; உத்தமன் -
பாதம் பணிகுவோம்!

"சாரதா"